இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 285 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – வைகாசி 13 – புதன்கிழமை 27 மே 2026 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 285 : Thiruvalluvar Year - 2057 - Vaikasi 13 - Wednesday 27 May 2026 - Dak 8 Pages ₹ 5.00


## தமிழ்நாட்டில் விஜய் ஆட்சியில் ‘குதிரை வேகத்தில்’ நடக்கிறது, ‘குதிரை பேரம்’!

# ‘தூய சக்தி’ என்று தம்பட்டம் அடித்தவர்கள், ‘துயர சக்தி’ என அம்பலப்பட்டிருக்கிறார்கள்!

## வலைதளப் பதிவில் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

சென்னை, மே 27-

தமிழ்நாட்டில், நேற்று முன்தினம் - அ.தி.மு.க.வின் ஒரு பிரிவைச் சேர்ந்த 3 எம்.எல்.ஏ.க்கள், அக்கட்சியில் இருந்து விலகுவதாக பேரவைத் தலைவரிடம் ‘விலகல் கடிதம்’ அளித்து விட்டு, அதனை அடுத்த நிகழ்வாக - தலைமைச் செயலகத்திலேயே அமைச்சர் ஒருவர் முன்னிலையில் ‘தமிழக வெற்றிக் கழகத்தில்’ இணைந்தனர்.

அரசியல் அரங்கில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள இந்நிகழ்வு, தமிழ்நாட்டு மக்கள் அருவருக்கத்தக்க அரசியல் சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது என்றால், அது மிகையல்ல!

த.வெ.க.வின் இந்த தகிடுதத்த அரசியல் நகர்வைக் கண்டித்து, நேற்று முன்தினம் மாலை சமூக வலைதளத்தில் பதிவிட்ட கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “தமிழ்நாட்டில் விஜய் ஆட்சியில் ‘குதிரை வேகத்தில்’ நடக்கிறது ‘குதிரை பேரம்’ என்று கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மேலும் அப்பதிவில் கழகத் தலைவர் அவர்கள், “தூய சக்தி” என்று சுய தம்பட்டம் அடித்தவர்கள், “துயரசக்தி” என அம்பலப்பட்டிருக்கிறார்கள் - என்றும் சாடியுள்ளார்.

அதன் விவரம் வருமாறு :-

அ.தி.மு.க. பொதுச் செயலர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் இருந்த அ.தி.மு.க., இ.பி.எஸ். அணி, சி.வி. சண்முகம் - எஸ்.பி. வேலுமணி அணி என இரண்டாக உடைந்தது.

இந்நிலையில், சி.வி.சண்முகம் - எஸ்.பி.வேலுமணி தரப்பு அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களான மதுராந்தகம் மரகதம் குமரவேல், பெருந்துறை ஜெயக்குமார் மற்றும் தாராபுரம் சத்ய பாமா ஆகியோர் தங்கள் சட்டப்பேரவை உறுப்பினர் பதவிகளை ராஜினாமா செய்து த.வெ.க.வில் இணைந்துள்ளனர். இதற்கு எதிர்க்கட்சிகள் தரப்பில் இருந்து பல்வேறு எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

தமிழ்நாடு இதுகாறும் கண்டிராத இந்த அநாகரிக அரசியலைக் கண்டித்து



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

**‘குதிரை வேக’த்தில் நடக்கும் ‘குதிரை பேரம்’!**

**Scene 1: பெரும்பான்மை இல்லாத நிலையில், தி.மு.க. கூட்டணிக் கட்சித் தலைவர்களிடம் ஆதரவு கேட்பது.**

**Scene 2: நம்பிக்கை வாக்கெடுப்பில் அ.தி.மு.க.வின் ஒரு அணியை ஆதரவாக வாக்களிக்க விலை பேசுவது. அ.ம.மு.க. உறுப்பினரையும் கொசுறு வாங்குவது.**

**Scene 3: அ.தி.மு.க. உறுப்பினர்கள் சிலரைப் பதவி விலகச் செய்து, தலைமைச் செயலகத்தில் வைத்தே தன் கட்சியில் இணைப்பது.**

**இந்த கண்றாவிக் காட்சிகளைப் பார்க்கத்தான் மக்கள் உங்களுக்கு வாக்களித்தார்களா?**

**‘தூயசக்தி’ என்று சுயதம்பட்டம் அடித்தவர்கள், ‘துயரசக்தி’ என அம்பலப்பட்டிருக்கிறார்கள்.**

**காங்கிரசின் போலி பா.ஜ.க. எதிர்ப்பு பல்லிளிக்கிறது!**

**NDA ஆதரவைக் கோராமல் இருந்தால் மட்டுமே ஆதரவு எனச் சொல்லிக் கடிதம் அளித்துவிட்டு, இப்போது நடக்கும் காட்சிகளை அமைச்சரவையில் இருந்து ரசித்து விசிலடிக்கும் காங்கிரசின் போலி பா.ஜ.க. எதிர்ப்பும் பல்லிளிக்கிறது!**

இவ்வாறு அப்பதிவில் கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

## விவசாயிகளுக்கு இழைக்கப்படும் மாபெரும் நம்பிக்கை மோசடி!

# பயிர்க்கடன் தள்ளுபடி என்ற பெயரில் ‘SCAM’ செய்வதா?

## த.வெ.க. அரசுக்கு – சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கடும் கண்டனம்!

**சென்னை, மே 27 -**

**“பயிர்க்கடன் தள்ளுபடி என்ற பெயரில் Scam செய்வதா?” என்று த.வெ.க. அரசுக்கு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

தமிழக வெற்றிக் கழகம் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் “5 ஏக்கருக்கு குறைவாக நிலம் வைத்துள்ள விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கியுள்ள பயிர்க்கடன்கள் முற்றிலுமாக தள்ளுபடி செய்யப்படும். 5 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்துள்ள விவசாயிகள் கூட்டுறவு வங்கியில் வாங்கியுள்ள பயிர்க்கடன்களில் 50 சதவீதம் தள்ளுபடி செய்யப்படும்” என அறிவித்தது.

அதாவது, குறு, சிறு விவசாயிகளுக்கு முழுமையாகவும், பெரு விவசாயிகளுக்கு 50 சதவீதமும் தள்ளுபடி என அறிவித்தது. ஆனால், தற்போது அறிவித்துள்ள பயிர்க்கடன் தள்ளுபடியில் பல்வேறு படிநிலைகளில் தள்ளுபடி அறிவித்துள்ளது த.வெ.க. அரசு.

மேலும், 2025 மே மாதம் முதல் 2026 பிப்ரவரி வரையில் பெற்ற கடன்களில் மட்டுமே இந்த



தள்ளுபடி வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இது விவசாயிகள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மூலதனச் செலவு அதிகரிப்பு, இடுபொருள் விலையேற்றம், பருவநிலை மாற்றம், இயற்கைப் பேரிடர்கள், நீர் பற்றாக்குறை, விளைச்சல் குறைவு, போதுமான விலை இல்லாமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் விவசாயிகள் பல்வேறு நெருக்கடிகளையும் வாழ்வாதாரச் சிக்கல்களையும் சந்தித்து வருகிறார்கள்.

இந்தச் சூழலில் த.வெ.க. அரசு விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்தால் உதவியாக இருக்கும் என்ற நம்பிக்கையில் இருந்த விவசாயிகளை ஏமாற்றியுள்ளது த.வெ.க. அரசு.

இந்நிலையில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது :-

**பயிர்க்கடன் தள்ளுபடி என்ற பெயரில் விவசாயிகளை ஏமாற்றி இருக்கிறது த.வெ.க அரசு.**

**தேர்தல் பிரச்சாரத்தின் போது, 5 ஏக்கர் வரை நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு முழுமையான பயிர்க்கடன் தள்ளுபடி என்று வாக்குறுதி தந்தார்கள்.**

**ஆனால், இப்போது ரூ.50,000 வரையிலான கடனுக்கு மட்டுமே முழு தள்ளுபடி என்று சொல்லி இருக்கிறார்கள். இது விவசாயிகளுக்கு இழைக்கப்படும் அநீதி. மாபெரும் நம்பிக்கை மோசடி.**

**ஏற்கனவே, 200 யூனிட் வரை கட்டணமில்லா மின்சாரம் என்று சொல்லிவிட்டு, 500 யூனிட்டுக்கு மேல் பயன்படுத்தினால் அது கிடையாது என்று அதிர்ச்சி தந்தார்கள். இப்போது, பயிர்க்கடன் தள்ளுபடி என்ற பெயரில், SCAM செய்கிறார்கள்.**

**இப்படி, இன்னும் நிறைய ஏமாற்றங்களுக்கு மக்கள் மனசளவுல தயாரா இருக்கணுமா CM saar?**

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

